# நக்கீரதேவநாயனாரின் திருஈங்கோய்மலை எழுபது: ஓர் இலக்கிய நோக்கு

**செல்வஅம்பிகை நந்தகுமரன்[1]**

## ஆய்வுச்சுருக்கம்

*பண்டைத்தமிழரின் வழிபடு தெய்வங்களாக இயற்கையின் கூறுகள் அமைந்திருந்தன. இயற்கை எழில்மிகு இடங்களில் இறைவன் விரும்பி உறைவதாகக் கருதி வழிபட்டனர். இயற்கையின் தன்மைக்கேற்ப நிலங்கள் ஐந்திணைகளாக வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு திணைகளுக்கும் உரிய தெய்வங்களும் சுட்டப்பட்டன. மலைப்பிரதேசமாகிய குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக முருகன் போற்றப்பட்டான். முருகனைப் பற்றிய செய்திகளோடு குறிஞ்சி நிலத்தின் இயற்கை அழகும் பழந்தமிழ் இலக்கியப் புலவர்களால் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. சிவனுடைய பாடல்பெற்ற தலங்களுள் மலை மீதிருக்கும் கோயில்கள் மிகச்சிலவே. திருஈங்கோய்மலை எழுபது என்னும் நூல் பதினொராம் திருமுறைக்குள் அடங்குகின்றது. திருஈங்கோய்மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருக்கோல அழகினையும் அற்புதங்களையும் குறிஞ்சி நிலப் பின்னணியில் நக்கீரதேவனாயனார் திருஈங்கோய்மலை எழுபதில் வர்ணித்துப் பாடியுள்ளார். இவருக்கு முன்பே திருஞானசம்பந்தரும் இத்தலத்தின் மீது பதிகமொன்றைப் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. திருஈங்கோய்மலை எழுபதை இலக்கிய நோக்காகக் கொண்டு ஆய்வுசெய்வதே ஆய்வின் முக்கிய பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது. நக்கீரதேவநாயனாரின் திருஈங்கோய்மலை எழுபது ஆய்வின் முதன்மை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக எழுந்த கட்டுரைகள் துணைமை ஆதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இந்நூல் இலக்கியப் பண்புகளைக் கொண்டு விளங்குகின்றது என்ற கருதுகோளின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இப்பிரபந்தத்தில் இலக்கியப் பண்புகள் எவ்வாறு வெளிப்பட்டு நிற்கின்றன என்பதை விவரண மற்றும் பகுப்பாய்வு முறையியல்களைத் துணைக்கொண்டு ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது. முடிவாக இலக்கிய நோக்கு நிலையில் ஆய்வுசெய்யும் பொழுது இப்பிரபந்தம் தமிழ் இலக்கிய உலகில் சிறப்புப்பெற்ற இலக்கியங்களில் ஒன்றாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது. இந்நூல் பக்தி இலக்கிய வரிசையில் இடம்பெற்றிருந்தமையால் அதனுடைய இலக்கியத்தரம் புலனாகாதவகையில் அமைந்திருக்கலாம். நக்கீரதேவரிடம் காணப்பட்ட தமிழ்புலமையும், ஆன்மிக நாட்டமும் தமிழ்ச்சுவையின் வழி பக்திச்சுவையைப் புலப்படுத்தும் ஆற்றலைத் தோற்றுவித்திருக்கும். பக்தி என்ற வரையறைக்கு அப்பால் தமிழ் இலக்கியம் என்ற தளத்தில் நக்கீரதேவநாயனாரின் திருஈங்கோய்மலைப் பதிகத்தை வைத்துப் பார்ப்பதே பொருத்தமானதாகும் என இந்த ஆய்வு பரிந்துரைக்கிறது.*

**திறவுச்சொற்கள்:** திருஈங்கோய்மலை, சிவபெருமான், நக்கீரதேவனாயனார், குறிஞ்சிநிலம், இலக்கியப் பண்புகள்.

---

[1]*தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
selvampikai@gmail.com

## அறிமுகம்

பண்டைத்தமிழரின் வழிபடு தெய்வங்களாக இயற்கையின் கூறுகள் அமைந்திருந்தன. இயற்கை எழில்மிகு இடங்களில் இறைவன் விரும்பி உறைவதாகக் கருதி வழிபட்டனர். இயற்கையின் தன்மைக்கேற்ப நிலங்கள் ஐந்திணைகளாக வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு திணைகளுக்கும் உரிய தெய்வங்களும் சுட்டப்பட்டன. மலைப்பிரதேசமாகிய குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக முருகன் போற்றப்பட்டான். முருகனைப் பற்றிய செய்திகளோடு குறிஞ்சி நிலத்தின் இயற்கை அழகும் பழந்தமிழ் இலக்கியப் புலவர்களால் புனைந்துரைக்கப்பட்டுள்ளது. சிவனுடைய பாடல்பெற்ற திருத்தலங்களுள் மலைமீதிருக்கும் கோயில்கள் மிகச்சிலவே. திருஈங்கோய்மலை எழுபது என்னும் நூல் பதினோராம் திருமுறைக்குள் அடங்குகின்றது. திருஈங்கோய்மலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் திருக்கோல அழகினையும் அற்புதங்களையும் குறிஞ்சிநிலப் பின்னணியில் நக்கீரதேவனாயனார் திருஈங்கோய்மலை எழுபதில் வர்ணித்துப் பாடியுள்ளார். திருஈங்கோய்மலை எழுபது என்னும் நூல் நல்ல இலக்கியநயம் வாய்ந்தது. இது தோத்திரநூல் வகையைச் சேர்ந்ததாயினும் இலக்கிய இன்பத்தினைத் தன்னகத்தே கொண்டு திகழவல்லது. இந்நூல் சைவத்திருமுறையில் பதினொராவது திருமுறையில் அடங்கியிருப்பதைவிட தனியே தமிழ் இலக்கியங்களின் வரிசையில் அமைந்திருப்பின் இலக்கியச் சுவையினை நயந்துகொள்ள விரும்புவருக்குப் பயனுடைய நூலாக இருந்திருக்கும். எனவேதான் திருஈங்கோய்மலை எழுபதை இலக்கிய நோக்கில் ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## நக்கீரதேவநாயனார்

திருஈங்கோய்மலை குறித்து ஆராய முற்பட முன்னர் இந்நூலைப் படைத்த நக்கீரதேவநாயனார் குறித்து நோக்குவது சிறந்தது. நக்கீரர் பாடியனவாகப் பின்வரும் நூல்கள் பதினொராம் திருமுறையில் காணப்படுகின்றன.

1. கயிலைபாதி காளத்திபாதி திருவந்தாதி
2. திருஈங்கோய்மலை எழுபது
3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை
4. திருஎழுகூற்றிருக்கை
5. பெருந்தேவபாணி
6. கோபப்பிரசாதம்
7. கார்எட்டு
8. போற்றித்திருக்கலி வெண்பா
9. திருகண்ணப்பதேவர் மறம்
10. திருமுருகாற்றுப்படை

நக்கீரர் என்ற பெயர் வாய்ந்த புலவர்கள் பலர் பண்டைக்காலத்தில் இருந்திருக்கின்றனர். கீரர் என்ற பெயர் என்ற புலவர் குழாத்துள் இருந்து வேறுபிரித்துக் காட்டவே மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் என்று குறிப்பிட்டு வந்துள்ளார்.

நக்கீரருடைய தந்தையார் ஆசிரியத்தொழிலை மேற்கொண்டு மதுரையில் வாழ்ந்தவர். நாளடையில் இவரது இயற்பெயர் மறைய தொழில் நிமித்தம் காரணமாக வழங்கப்பட்ட கணக்காயர் என்ற பெயரே நிலைபெறலாயிற்று. கணக்காயர் என்பவர் ஆசிரியர் ஆவார். தந்தையாரைக் குறிக்கும் அடைமொழித்தொடருடனே இப்புலவர் குறிப்பிடப்பட்டார். நக்கீரர் தமிழ் மீதும் தமிழ்ச்சங்கம் மீதும் கொண்டிருந்த பற்றினைச் சங்கஇலக்கியப் பாடல்களும் அவர் பற்றிய தொன்மக்கதைகளும் சான்றுபகர்கின்றன.

சங்கநூல்களில் நக்கீரர் பாடியதாக திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, நற்றிணை (07), குறுந்தொகை (08), அகநானூறு (16), புறநானூறு (04) ஆகியவை காணப்படுகின்றன. பதினொராம் திருமுறையிலுள்ள திருமுருகாற்றுப்படையைத் தவிர பிறநூல்கள் பிற்காலத்தில் இப்பெரும் புலவர் பெயர் தாங்கிய நக்கீரதேவர் என்பவரால் பாடப்பட்டவை என்பது ஆய்வாளர்களின் முடிவாகும். ஏனெனில் சங்கநூல்களின் மொழிநடைக்கும் நக்கீரதேவர் நூல்களின் மொழிநடைக்கும் பெரும் வேறுபாடு உள்ளது. சங்க நக்கீரர் நூல்களில் அருகிய வடசொற்கள் அமைய திருமுறையிலுள்ள ஏனைய ஒன்பது நூல்களிலும் எண்ணற்ற வடசொற்கள், வடமொழி வழிபாட்டு மரபுகள் விதந்துபோற்றப்பட்டுள்ளன. நக்கீரதேவரின் பாடல்களில் தேவார திருவாசக சொற்றொடர்களும் கருத்துக்களும் பயின்று வந்துள்ளமையால் இவருடைய காலம் சமயகுரவர்களின் காலத்திற்குப் பிற்பட்டது என்ற கருத்து நிலவுகின்றது.

புலவர் பற்றிய கருத்து வேறுபாடுகளும் கால வேறுபாடுகளும் காணப்படுகின்ற போதும் தமிழ்ச்சுவையும், பக்திச்சுவையும் கொண்ட இலக்கியங்களாக இவை அமைகின்றன என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை.

**திருஈங்கோய்மலை எழுபது**

திருஈங்கோய்மலை என்பதை திருலிங்கநாதமலை, வெங்கமலை என்றும் கூறுவார்கள். இத்தலத்தில் அகத்தியர் ஈ உருவாய் இருந்து இறைவனைப் பூசித்ததாகப் புராண வரலாறு கூறுகின்றது. கோய் என்பதற்கு குகை என்ற பொருளும் உண்டு. குகைகளை உடைய மலை என்ற பொருளில் கோய்மலை ஆகியது. நாளடைவில் அதுவே ஈங்கோய்மலை ஆயிற்று. இத்தலத்திற்கு திருஞானசம்பந்தர் பாடிய பதிகம் ஒன்று உண்டு. மாணிக்கவாசகரும் இத்தலத்தைப்பற்றிக் குறிப்பிட்ட சான்றுகள் திருவாசகத்திலும் திருக்கோவையரிலும் காணப்படுகின்றன.

நூல்களுக்குப் பெயர் அமைப்பதில் பல வகையினைக் கைக்கொண்டதைப் பாட்டியல் நூல்கள் மூலம் அறியலாம். அவ்வகைகளில் ஒன்று செய்யுட்களின் எண்ணிக்கை அளவால் பெயரிடுவது ஆகும். இவ்விலக்கண மரபை ஒட்டியே இந்நூல் ஈங்கோய்மலை எழுபது எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்நூலில் அமைந்துள்ள முறைவைப்பு ஒரு குறிக்கோளுடன்

அமைந்திருப்பதை அவதானிக்கலாம். நக்கீரதேவநாயனார் தாம் பாடியுள்ள பாடல்களை அகரவரிசைப்படுத்திப் பாடியுள்ளார். இந்நூலில் அமைந்துள்ள வெண்பாக்களில் இறைவனைப் பற்றி வரும் அடி பெரும்பாலும் ஒவ்வொரு வெண்பாவின் இறுதி அடியே ஆகும். ஏனைய மூன்று அடிகள் குறிஞ்சிநிலக் கருப்பொருள்களைப் பற்றியனவாக உள்ளன. சங்க இலக்கியங்களைப் போல திருஈங்கோய்மலை எழுபது என்னும் நூலிலும் இயற்கையோடு இயைந்த கற்பனைகள் நிறைந்திருப்பதைக் காணலாம்.

## திருஈங்கோய்மலை எழுபதில் காணப்படும் இலக்கியப் பண்புகள்

திருமுறைகளின் வரிசையில் இடம்பெறும் திருஈங்கோய்மலை எழுபதின் புலப்பாட்டுமரபு அதன் இலக்கிய வளத்தைச் சான்று செய்வது நோக்கத்தக்கது. இதனை மேல்வரும் அடிப்படையில் பகுத்து ஆய்வுசெய்யலாம்.

- பழந்தமிழ் இலக்கிய மரபை உள்வாங்கியிருத்தல்
- புராணச் செய்திகளின் பதிவுகள்
- அணிப்பிரயோகங்கள்
- இயற்கை வர்ணனையின் பதிவுகள்
- நெகிழ்ச்சியான மொழிநடை
- சுவைகள்

## பழந்தமிழ் இலக்கிய மரபை உள்வாங்கியிருத்தல்

நக்கீரதேவநாயனார் பழந்தமிழ் இலக்கியமரபில் ஊறிநின்றே திருங்கோய்மலை எழுபதைப் பாடியிருக்கின்றார். திருமுருகாற்றுப்படையில்,

''காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாருங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்''

(திருமுருகாற்றுப்படை: 223 – 226)

என்று இயற்கையுடன் கூடிய வழிபாட்டினை நக்கீரர் வெளிப்படுத்துகின்றார். நக்கீரதேவநாயனாரும் இதனை ஒத்த தன்மையில் பல்வேறு இடங்களிலும் இயற்கைளுடன் கூடிய வழிபாட்டுச்சூழலை வர்ணித்துள்ளார்.

''முல்லையங்கள் பல்லரும்பு மொய்த்தீனம் ஈங்கோயே''

(திருஈங்கோய்மலை எழுபது: 28)

''வாழை இலையால் தேன் உண்டுவக்கும் ஈங்கோயே''

(திருஈங்கோய்மலை எழுபது: 33)

"மேனின்று அருவிகள்தம் வந்திழியும் ஈங்கோயே"

(திருஈங்கோய்மலை எழுபது: 49)

எனவரும் அடிகள் இக்கருத்தைச் சான்று செய்கின்றன.

சங்கஇலக்கியங்கள் சிறப்பான அகத்திணை மரபை வெளிப்படுத்தியுள்ளன. சங்க இலக்கியங்களில் மானுடக் காதலாக இருந்த அகத்திணைமரபு பக்தி இலக்கியங்களில் தெய்வீகக் காதலாக மாறுகின்றது. மானுடர்களின் அகத்திணைக் காதல் பற்றிப் பேசும் பொழுது உயிரினங்களின் அன்புறு வாழ்வியலும் இணைத்தே பாடப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் இவற்றை இனங்காண முடிகின்றது. அஃறிணைப் பொருள்கள் காதலினால் தமது பெண் இனத்திற்குப் பெரிதும் அன்புகாட்டித் துணைபுரிதல் பற்றிய குறிப்பு சங்க இலக்கியங்களில் பல இடங்களில் வருகின்றன. திருநாவுக்கரசர் நாயனாரின் திருவையாற்றுப் பதிகத்தில் விலங்கு, பறவைகளின் அன்புறு நிலையும் அவற்றைச் சிவனும் சக்தியுமாகக் காணும் நிலையும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. திருவையாற்றும் பதிகத்தில் வருகின்ற,

"காதன் மடப்பிடியோடுங்
களிறு வருவனக் கண்டேன்"

"கோழி பெடையோடுங் கூடிக்
குளிர்ந்து வருவன கண்டேன்"

"வரிக்குயில் பேடையொ டாடி
வைகி வருவன கண்டேன்"

என்னும் பாடல்வரிகள் இதற்குச் சான்று பகர்கின்றன. விலங்குகளின் அன்புறுநிலைக் காட்சியை நக்கீரதேவநாயனாரும் தமது இலக்கியத்தில் பதிவுசெய்துள்ளார்.

"கலவிக் களிறசைத்த காற்றெங்கும் காணாது
இலைக்கைக்கொண் டேந்திக்கால் வீச – உலவிச்சென்று
ஒண்பிடிகாற் றேற்றுகக்கும் ஈங்கோயே"

(திருஈங்கோய்மலை எழுபது: 25)

புணர்ச்சிக்குப் பின் ஏற்பட்ட களைப்பினால் காற்றுப்பெறாத பிடியானை சோர்திருந்தது. அந்நிலையில் களிற்றுயானை இலையை வீசி காற்றை எழுப்பி பெண்யானையின் களைப்பை நீக்கியது. அக்காற்றை ஏற்றுப் பெண்யானை மகிழ்ந்தது. இப்பாடல் சங்க அகத்திணை மரபின் தொடர்ச்சிக்குப் பொருத்தமான சான்றாகும்.

## புராணச் செய்திகளின் பதிவுகள்

திருஈங்கோய்மலை எழுபதில் புராணச் செய்திகள் பலவற்றை நக்கீரதேவநாயனார் பல்வேறு இடங்களில் பதிவு செய்துள்ளார். சிவபெருமான், முருகன், உமாதேவியார், திருமால், பிரமன், இயமன், காமன் போன்றவர்களோடு தொடர்பான புராணச் செய்திகள் பாடல்களின் பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிய வரலாறு, ஆலகால விடத்தை சிவபெருமான உண்டது, இயமனைக் காலால் உதைத்தது, முப்புரங்களை எரித்தது போன்ற தொன்மச் செய்திகளைப் பதிவுசெய்ததனூடாகக் கற்போருக்குச் சமய அறிவை வழங்கியுள்ளார்.

''அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும் பாய்ந்தேறி – நொடியுங்கால்
இன்னதென அறியா ஈங்கோயே''

(திருஈங்கோய்மலை எழுபது: 1)

''மையடுத்த கண்டன் மலை''

(திருஈங்கோய்மலை எழுபது: 4)

''வெங்கூற்றைச் சேராமல் செற்றான் சிலம்பு''

(திருஈங்கோய்மலை எழுபது: 47)

''தூங்கெயில்கள் சென்றன்று வென்றான் சிலம்பு''

(திருஈங்கோய்மலை எழுபது: 14)

போன்ற அடிகள் திருஈங்கோய்மலை எழுபதில் காணப்படும் புராணச் செய்திகளுக்குச் சில எடுத்துக்காட்டுகளாகும். இவற்றைவிட மன்மதனை அழித்தது, மலைமகளை இடப்பாகம் கொண்டது, சந்திரனையும் கங்கையையும் சடையில் சூடியது, முருகன் அழகிய மயில் ஊர்தியை உடையவன், சிவபெருமானின் திருக்குமாரன், மேருமலையை வில்லாக வளைத்தது போன்ற புராணச் செய்திகள் பலவற்றை பல்வேறு இடங்களில் பதிவுசெய்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இலக்கியங்களில் தொன்மச்செய்திகளைக் கையாளுதல் என்பது ஒருவகை உத்திநிலையாகும். காரைக்காலம்மையார், நாயன்மார்கள் போன்றவர்களிடமும் தொன்மங்களை இலக்கிய உத்திநிலையாகக் கையாளும் பண்பு இருந்துள்ளது.

அதன் தொடர்ச்சி நிலையாக நக்கீரதேவநாயனாரும் தொன்மங்களைத் தமது பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு தொன்மம் என்னும் இலக்கிய உத்திநிலையினூடாக சமய உண்மைகளை வெளிப்படுத்தி இருத்தலைக் காணலாம்.

## அணிப்பிரயோகங்கள்

நக்கீரதேவநாயனாரின் புனைதிறன்களில் ஒன்று அணிப்பிரயோகங்கள் ஆகும். கடுமையான அணிஅலங்காரங்களைப் பயன்படுத்தாமல் கற்போருக்கு விளங்கத்தக்க

வகையிலான உவமை அணியினையும் எதுகைமோனைச் சொற்களையும் தமது பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். அணி அலங்காரங்களின் பிரயோகங்கள் என்பதனை இவரது பாடல்களில் அரிதாகவே கண்டுகொள்ள முடிகின்றது. தாம் கண்ட குறிஞ்சிநிலக் காட்சிகளை இயல்பான நிலையில் பதிவுசெய்துள்ளமை இவரது வியக்கத்தக்க புனைதிறன்களில் ஒன்றாகும்.

''அம்பவள வாய் மகளிர்'' (திருஈங்கோய்மலை எழுபது: 3)

''கோங்கின் அருப்பழித்த கொங்கைக் குறமகளிர்'' (திருஈங்கோய்மலை எழுபது:37)

''கொவ்வைக் கனிவாய் மகளிர்'' (திருஈங்கோய்மலை எழுபது: 35)

''ஒளிர் முத்தம் பனி நிகர்க்கும்'' (திருஈங்கோய்மலை எழுபது: 63)

என எளிமையான உவமைத் தொடர்களைக் கையாண்டுள்ளமை நக்கீரதேவநாயனாரின் புலப்பாட்டு நெறியின் தனிச்சிறப்பைக் காட்டுவதாகும். ஒருவகையான நின்ற சொற்றொடர் பல வகையான பொருள்களின் தன்மையை வெளிப்படுத்தும் சிலேடை அணியினையும் ஆசிரியர் கையாண்டுள்ளார்.

''தாமரையின் தான் தகைத்த தாமரைகள் தாள்தகையத்
தாமரையில் பாய்ந்துகளும் தண்புறவில் – தாமரையின்
ஈட்டம் புலிசிதறும் ஈங்கோயே''

(திருஈங்கோய்மலை எழுபது: 46)

இப்பாடலில் தாமரை என்பது சிலேடை அணியாகும். தாமரை என்ற சொல்லை வேறுவேறு வகையாகப் பிரித்துப் பொருள்கொள்ள முடியம். தாமரை என்பது தாமரை மலரையும், தாவுகின்றமரை அதாவது மானின் கூட்டத்தையும் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தாமரை என்ற சொல்லை இருவகையாகப் பிரித்துப் பொருள்கொள்ளத்தக்க வகையில் அமைந்துள்ளதால் இது பிரிவுமொழிச்சிலேடை அணியின் வகையாக அமைகின்றது. நக்கீரதேவநாயனாரின் அணிப்பிரயோகங்கள் கற்பனை வளத்தையும், சிறப்பான பொருட்புலப்பாட்டையும், இயல்பான காட்சி வர்ணிப்பின் திறனையும் காட்டுகின்றன.

## இயற்கை வர்ணனையின் பதிவுகள்

பக்தியைப் பாடுபொருளாகக் கொண்டிருந்த போதும் இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு அதை அழகிய முறையில் வர்ணிக்கும் நூலாகத் திருஈங்கோய்மலை எழுபது விளங்குகின்றது. சங்கஇலக்கிய மரபின் பிரதான கூறுகளாக அகம், புறம் என்ற இரண்டும் அமைகின்றன. அன்பினைந்திணையுள் ஒன்றான குறிஞ்சித்திணையின் முதற்பொருள், கருப்பொருள்களின் பின்னணியில் சைவபக்திச் சுவையோடு இந்நூல் பாடப்பட்டுள்ளது. சைவபக்தியைப் பாடுவதை நோக்கமாகக் கொண்டிருந்தபோதும் சங்க இலக்கிய மரபின் தொடர்ச்சியாக இயற்கையை அழகிய முறையில் வர்ணிக்கும் நூலாக விளங்குகின்றது. இந்நூலைக் கற்கும்போது இயற்கையோடு இயைந்த கற்பனைகள் நிறைந்திருப்பதைக் காணலாம்.

இந்நூலில் உள்ள வெண்பாக்களில் இறைவனைப்பற்றி வரும் அடி பெரும்பாலும் வெண்பாவின் இறுதி அடியே ஆகும். ஏனைய மூன்று அடிகள் குறிஞ்சிநிலக் கருப்பொருள்களைப் பற்றியனவாக அமைகின்றன. இவ்வாறு அமைகின்ற குறிப்புக்கள் சங்க அகத்திணை நூல்களில் காணப்படுவன போலவே அமைகின்றன. எடுத்துக்காட்டாக,

''கறுத்த முலைச் சூல்பிடிக்கும் கார்யானை சந்தம்
இறுத்துக்கை நீட்டும்ஈங்கோயே''

(திருஈங்கோய்மலை எழுபது: 23)

என்ற பாடலில் களிற்றுயானை தன் பிடியானைக்கு தழைகள் ஒடித்துக் கொடுக்கும் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இது பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிலும் பல இடங்களில் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

''புன்தலை மடப்பிடி உணீஇயர் அம்குழை
நெடுநிலை யாஆம் ஒற்றி நனைகவுள்
படி ஞிமிறு கடியும் களிறே''

(அகநானூறு: 59)

''கயந்தலை மடப்பிடி உயங்குபசி களைஇய
பெருங்களிறு தொலைத்த முடித்தாள் ஓமை''

(நற்றிணை: 137)

எனச் சங்க இலக்கியங்களில் வந்துள்ளதைக் காணலாம். குறிஞ்சி திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், வர்ணனைகள், இயற்கை வர்ணனையின் இலக்கியமாக திருஈங்கோய்மலை எழுபது விளங்குகின்றது என்பதைச் சான்றுபடுத்துகின்றது.

''உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்ப்
பண்டிருந்து யாழ்முரலப் பைம்பொழில்வாய்க் – கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும்''

(திருஈங்கோய்மலை எழுபது: 10)

''காந்தளம் கைத்தலங்கள் காட்டக் களிமஞ்ஞை
கூந்தல் விரித்துடனே கூத்தாடச் – சாய்ந்திரங்கி
ஏர்க்கொன்றை பொன்தொடுக்கும்''

(திருஈங்கோய்மலை எழுபது: 31)

''தேன்பலவின் வான்சுளைகள் செம்முகத்த பைங்குரங்கு
தான்கொணர்ந்து மக்கள்கை யில்கொடுத்து – வான்
பாராட்டி ஊட்டும்''

(திருஈங்கோய்மலை எழுபது: 49)

போன்ற பாடல் அடிகள் இயற்கை வர்ணனையின் பதிவுகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவ்வாறு பாடல்களின் முழுமைக்கும் இயற்கை வர்ணனையின் பதிவுகளை வெளிப்படுத்தியிருத்தலைக் காணலாம்.

**நெகிழ்ச்சியான மொழிநடை**

இலக்கியத்திற்கும் மொழிக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இலக்கிய ஆக்கத்துக்குரிய கருவிகளில் மொழியும் ஒன்றாகும். இலக்கிய ஆசிரியரின் கருத்தையும் உணர்ச்சியையும் வெளிப்படுத்தும் கருவியாக மொழிநடை அமைகின்றது. பொருத்தமான சொல்லை, பொருத்தமான அளவில், பொருத்தமான இடத்தில் பயன்படுத்தும்போதே இலக்கிய ஆசிரியரின் கருத்தும் உணர்ச்சியும் அழுத்தம் பெறும். எளிமையும், இனிமையும், இறுக்கமும் உடைய மொழிநடை படிப்பவரை இறுதிவரை சலிப்பூட்டாமல் இலக்கியத்தோடு ஒன்றச்செய்யும். அந்தவகையில் நக்கீரதேவநாயனாரின் மொழிநடை சிறப்பானதாகக் காணப்படுகின்றது.

திருஈங்கோய்மலை எழுபதில் இடம்பெறும் மொழிநடை மிகவும் எளிமையானதாக, படிப்போர் விளங்கத்தக்க வகையில் ஆற்றொழுக்கினைப் போல நகர்ந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது. குறிஞ்சித்திணை சார்ந்து சிவவழிபாடு இடம்பெறுவதனால் குறிஞ்சித்திணையில் கையாளப்படும் சொற்களையும், தொடர்களையும் குறிஞ்சித்திணையின் வாழ்வியலையும் தமது பாடல்களில் கையாண்டுள்ளார். குறிஞ்சித்திணையில் குறவர் குறத்தியினரின் செயல்களும், இயற்கைக் காட்சி வர்ணனைகளும் சங்க இலக்கியங்களை நினைவூட்டும் வகையில் அமைகின்றன.

அடைமொழியைக் கையாளுதல் இவரது பாடல்களில் சிறப்பானதாகக் காணப்படுகின்றது. தனிச் சொற்களுக்கு அடைகொடுத்துக் கூறும்போது தனிச்சொற்களின் பண்புகள் நுட்பமாக வெளிப்படுத்தப்படும். அந்தவகையில் ஒண்கதலி, முதுவேடன், கருஞ்சுனை, ஒள்இலவம், கறுத்தமுலை, செந்தேன், பைந்தழை, ஒண்கானம், பொன்வண்டு, இன்நறவம், பூஞ்சுனை போன்ற சொற்கள் அடைமொழியோடு கூடிய சொற்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

குறப்பெண்கள் அம்மானை ஆடுதல், முதுகுறத்தி தன் பெண் கருவுயிர்த்தபோது அசலைக்கிழங்கை வேகவைத்துக் கொடுத்தன், யானைகளின் தந்தங்களைக் கொண்டு கல் உரலில் தினை இடித்தல், தினைமாவுடன் தேன் கலந்து இனிது உண்ணல், தேன் பருகி குரவை ஆடுதல், தினைப்புனக் காவல் செய்தல், யானைகளைக் கவண் கொண்டு எறிதல், வேட்டையாடுதல் போன்ற குறிஞ்சித்திணைக்குரிய பண்பாட்டு வாழ்வியலையும் நக்கீரதேவர் பதிவுசெய்துள்ளமையும் குறிப்பிட வேண்டியதொன்று.

**சுவைகள்**

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலில் முத்பத்திரண்டு உணர்ச்சி அனுபவங்கள் குறித்து விவரித்துள்ளது. மெய்ப்பாடு என்பது உடலின் உணர்ச்சிகள் பிறருக்குப் புலனாகும் வகையில் வெளிப்படத் தோன்றுதலாகும். தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் மெய்ப்பாடுகளை அடிப்படையாகக் கொள்கின்றார்.

புலவர்கள் தொல்காப்பியம் சுட்டிய எட்டுவகையான மெய்ப்பாடுகளையும் இலக்கிய உத்திநிலையாக தமது பாடல்களில் கையாண்டுள்ளனர். நக்கீரதேவரும் மெய்ப்பாடுகளை விலங்கு, பறவைகளின் வாழ்வியலினூடாகச் சுவைபட விவரித்துச் செல்கின்றார்.

உவகை என்னும் மெய்ப்பாடு பிறக்கும் நிலைக்களன்களில் ஒன்று புணர்ச்சி என்பதாகும். ஆண், பெண் யானைகளின் ஊடலையும், கூடலையும் நக்கீரதேவர் பின்வரும் பாடல் அடிகளினூடாகக் காட்டுகின்றார்.

‘‘ஊடிப் பிடிஉறங்கு ஓண்கதலி வண்கனிகள்
நாடிக் களிறு நயந்தெடுத்துக் – கூடிக்
குணம் மருட்டிக் கொண்டாடும்’’

(திருஈங்கோய்மலை எழுபது: 11)

பெண்யானை பிணங்கி உறங்கிட ஆண்யானை சென்று ஒளி பொருந்திய வாழையின் வளப்பம் நிறைந்த கனிகளை விரும்பி எடுத்து வந்துகூடி பிடியின் ஊடலைப் பேதித்துக் கொண்டாடும். இப்பாடலில் யானைகளின் புணர்ச்சி நிலையால் ஏற்படும் உவகைச்சுவை பேசப்பட்டுள்ளது.

அச்சம் என்னும் மெய்ப்பாடு தோன்றும் களன்களில் ஒன்று விலங்கு என்பதாகும். காட்டில் விலங்குகளால் ஏற்படும் அச்சம் குறித்து திருஈங்கோய்மலை எழுபது பின்வருமாறு காட்டுகின்றது.

‘‘ஏழை இளமாதே என்னொடுநீ போதென்று
கூழை முதவேடன் கொண்டுபோய் – வேழ
இனைக்குவால் வீட்டுவிக்கும்’’

(திருஈங்கோய்மலை எழுபது: 13)

இளம்பெண்ணே என்னுடன் வருவாயாக என வயது முதிர்ந்த வேடன் ஒருவன் அழைத்துப்போய் யானைககூட்டத்திலிருந்து அப்பெண்ணை விடுவித்தான் என்பது பாட்டின் பொருள். யானைகளைக் கண்டால் இளம்பெண்களுக்கு ஏற்படும் அச்சம் இப்பாடலால் பேசப்பட்டுள்ளது.

நகைச்சுவை என்னும் மெய்ப்பாடு தோன்றும் களன்களில் ஒன்று பேதமை ஆகும். குறும்புத்தனம் மிக்க சிறுகுரங்கினால் ஏற்படும் நகைச்சுவையை நக்கீரதேவர் சுவைபட விபரிக்கின்றார்.

"கல்லாக் குரங்கு பளிங்கில் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடன்சூண்டி – வல்லே
இருந்துகிரால் கல்கிளைக்கும்"

(திருஈங்கோய்மலை எழுபது: 29)

குறும்புத்தனங் கொண்ட சிறுகுரங்கு மரத்தில் இருந்துகொண்டு பளிங்குக் கல்லில் கையிலுள்ள கனிக்கொத்தின் நிழல் தெரியும்படி காட்டியது. அந்நிழலை உண்மைப் பழங்கொத்து எனக்கொண்ட ஏனைய குரங்குகள் அதனைப்பெற ஒன்றுகூடி தம் நகங்களால் பளிங்கைக் கீறின என்பது பாட்டின் பொருள். குரங்குகளின் அறியாமை நகைச்சுவையை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறாக பக்திச்சுவையைப் புலப்படுத்துவதற்கு தொல்காப்பியர் கூறிய மெய்ப்பாடுகளையும் நக்கீரதேவர் தமது பாடலில் பொருத்தமுறக் கையாண்டுள்ளார்.

**நிறைவுரை**

நக்கீரதேவநாயனாரின் திருஈங்கோய்மலை எழுபது தமிழ் இலக்கிய உலகில் சிறப்புப்பெற்ற இலக்கியங்களில் ஒன்றாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது. இலக்கியச் சிறப்புப் பெற்றிருக்கும் இந்நூல் பக்தி இலக்கிய வரிசையில் இடம்பெற்றிருந்தமையால் அதனுடைய இலக்கியத்தரம் புலனாகாதவகையில் அமைந்திருந்திருக்கலாம். இலக்கிய நோக்கு நிலையில் ஆய்வுசெய்யும் பொழுது அதன் இலக்கியச் சிறப்பினையும் தரத்தினையும் கண்டுகொள்ள முடிகின்றது. நக்கீரதேவரிடம் காணப்பட்ட தமிழ் புலமையும், ஆன்மிக நாட்டமும் தமிழ்ச்சுவையின்வழி பக்திச்சுவையைப் புலப்படுத்தும் ஆற்றலைத் தோற்றுவித்திருக்கும். பக்தி என்ற வரையறைக்கு அப்பால் தமிழ் இலக்கியம் என்ற தளத்தில் நக்கீரதேவநாயனாரின் திருஈங்கோய்மலைப் பதிகத்தை வைத்துப் பார்ப்பதே பொருத்தமானதாகும்.

**உசாத்துணை**

அகநானூறு, (2010), புலியூர்கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.

திருஈங்கோய்மலை எழுபது, (1977), பாலூர் கண்ணப்பமுதலியார் உரை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

தொல்காப்பியம், (2007), பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும், கணேசையர் பதிப்பு, பின்னான்கியல்கள், பாகம் இரண்டு, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

நற்றிணை, (2010), ஔவைதுரைசாமிப்பிள்ளை உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை.

பதினொராம் திருமுறை, (2005), பி. ரா. நடராசன் உரை, உமா பதிப்பகம், சென்னை.